தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

படிவ இலக்கம் : 01

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல:- 183
நிறுவனத்தின் பெயர் :- தேர்தல் ஆணைக்குழு

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்		குறைபாடுகளை சீர் செய்வதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலமை
01.	நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவராமை.	நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் எனது இலக்கம்: S/08/1/2022 மற்றும் 2022.11.17 ஆம் திகதிய கடிதத்தினூடாக தலைமை அலுவலகத்தின் பிரிவுகள் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்காக வெளியிடப்பட்டுள்ளது. 2022.12.31 ஆம் திகதியாகும்போது நிலையான சொத்துக்களை இற்றைப்படுத்தலை நிறைவு செய்யுமாறு அதனூடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
02.	நட்டங்கள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணி வராமை	தற்போது நட்டங்கள் பற்றிய பதிவேடு இற்றைப்படுத்திப் பேணி வரப்படுகின்றது.
03.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியனால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்துக் கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்கப்பட்டிருக்காமை	மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்து பதில்களைப் பெற்று கணக்காய்வு ஐய வினாக்களுக்கான தெளிவுபடுத்தல்களை தயாரிக்கும் சந்தர்ப்பங்களில் சிலவேளை பதில்களை அனுப்புவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் உரிய திகதிக்கு முன்னர் பதில்களை வழங்குவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
04.	சேதமடைந்த வாகனமொன்றை 6 மாத காலத்தினுள் புறத்தொதுக்காதிருத்தல்.	கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக சேதமடைந்த வாகனத்தை உரிய காலத்திற்கு முன்னர் புறத்தொதுக்குவதற்கு முடியாதிருந்ததுடன் தற்போது அனைத்து சேதமடைந்த வாகனங்களையும் புறத்தொதுக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
05.	2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு சம்பந்தமான சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு சம்பந்தமான சோதனையை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் பயன்பாடு சம்பந்தமான சோதனையை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் வாகனங்களுக்கான எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்டமையினால் சுற்றறிக்கைப் பிரகாரம் எரிபொருள் சோதனையை மேற்கொள்ள முடியவில்லை. அந்த சோதனையை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
06.	ஒரு வருடத்திலும் அதிக காலமாக நிலவி வரும் கடன் நிலுவையை தீர்க்காதிருத்தல்.	பணியை விட்டுச் சென்ற கீழ் குறிப்பிடப்படும் அலுவலர்களின் கடன் நிலுவையை அறவிட்டுக்கொள்ள வேண்டியுள்ளது. 1. டீ.ஐ.லியனகே 97110 2. ஆர்.நாகரத்னம் 119170 3. எம்.பீ.எஸ்.எச். டயஸ் 202660 இந்த கடன் நிலுவையை துரிதமாக அறவிட்டுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

07.	அங்கீகரிக்கப்பட்டுள்ள வரையறையைத் விஞ்சி ஆளணிக்கு ஆட்சேர்ப்புச் செய்திருத்தல்	அங்கீகரிக்கப்பட்டுள்ள வரையறையைத் விஞ்சி ஆளணிக்கு அலுவலர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படவில்லை.
08.	தனது விடயப் பரப்பிற்கமைய நிறுவனம் பேண்தகு இலக்குகளை இனங்கண்டு கொண்டிருக்கவில்லை.	பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன.
09.	இனங்காணப்பட்ட பேண்தகு இலக்குகளை அடைந்துகொள்வதனை அளவிடுவதற்காக செயலாற்றுகை இலக்குகள் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதனை அளவிடுவதற்காக செயலாற்றுகை குறிகாட்டிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.
10.	நிறுவனத்தின் பேண்தகு இலக்குகளை அடைந்துகொள்வதுடன் தொடர்புடைய குறித்துரைக்கப்பட்ட தரப்புக்கள் இனங்கண்டுகொள்ளப்பட்டிருக்கவில்லை.	தற்போது நிறுவனத்தின் பேண்தகு இலக்குகளை அடைந்துகொள்வதுடன் தொடர்புடைய குறித்துரைக்கப்பட்ட தரப்புக்கள் இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளன. அந்தத் தரப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் செயற்பாடுகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.
11.	பேண்தகு அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சின் 2018.04.27 ஆம் திகதிய MSDW/08/65 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நிறைவேற்ற வேண்டிய பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக நியமிக்கப்பட வேண்டிய இரண்டு பிரதிநிதிகள் சம்பந்தமான விபரங்களை பேண்தகு அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சுக்கு அறிக்கைப்படுத்தப்பட்டிராமை.	நிறைவேற்ற வேண்டிய பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திரு. இந்துனில் பண்டார - உதவி ஆணையாளர் (நிருவாகம்) திருமதி சந்தியா தீபிக்கா - நிருவாக அலுவலர்
12.	தயாரிக்கப்பட்ட மனித வளங்கள் திட்டத்தினூடாக ஒரு ஊழியருக்கு குறைந்தது ஒரு வருடத்தில் 12 மணித்தியால மேலதிகப் பயிற்சி வழங்குவதற்கு குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் மனித வளங்கள் திட்டத்தில் ஒரு ஊழியருக்கு குறைந்தது ஒரு வருடத்தில் 12 மணித்தியால மேலதிகப் பயிற்சி வழங்கப்படும் வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
13.	மொத்த ஆளணியும் உட்படுத்தப்படும் வகையில் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஆளணிக்கு கடமைகளை ஒப்படைப்பதற்கான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. மொத்த ஆளணியும் உள்ளடக்கப்படும் வகையில் செயலாற்றுகை ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படாதிருப்பினும் வருடாந்தம் பதவிநிலை அலுவலர்களுக்கான செயலாற்றுகை ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.
14.	நிறுவனத்தின் கணக்குகள் சம்பந்தமான கணக்காய்வுக் கருத்துரை பொறுப்பு துறப்பு மட்டத்தில் அல்லது தீமை பயக்கும் மட்டத்தில் இருத்தல்.	எதிர்வரும் ஆண்டுகளில் குறைபாடுகள் மற்றும் பிழைகள் குறைவான வகையில் நடவடிக்கை மேற்கொண்டு சிறந்த மட்டத்திலான கணக்காய்வுக் கருத்துரையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
15.	வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைக்கமைய மிகக் 03 குறைந்த வெளியீட்டுக் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வெளியீட்டுக் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

16.	நிறுவனத்தினால் ஆற்றப்படும் அலுவல்களுடன் தொடர்புடைய 03 பிரதான அலுவல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.	ஆணைக்குழுவினால் ஆற்றப்படும் அலுவல்களுடன் தொடர்புடைய பிரதான குறிகாட்டிகள் இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்தக் குறிகாட்டிகள் மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிரதான அலுவல் குறிகாட்டியை வருடாந்த செயல் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
17.	இனங்கண்டுகொள்ளப்பட்ட முதலாவது குறிகாட்டியின் அடைவு 50% இலும் குறைவு. இனங்கண்டுகொள்ளப்பட்ட இரண்டாவது குறிகாட்டியின் அடைவு 50% இலும் குறைவு. இனங்கண்டுகொள்ளப்பட்ட மூன்றாவது குறிகாட்டியின் அடைவு 50% இலும் குறைவு.	கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை 2020 ஆம் ஆண்டில் இனங்கண்டுகொள்ளப்பட்ட செயலாற்றுகை குறிகாட்டிகளின் அடைவு முன்னேற்றம் 50% இலும் குறைவடைவதற்குக் காரணமாகுவதுடன் 2023 ஆம் ஆண்டில் உச்சளவு அடைவு முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.
18.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள்/ பிழைகள் சரி செய்யப்பட்டிருக்காமை.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள்/ பிழைகள் சரி செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் செயற்பாடுகளை அனைத்து அலுவலர்களுக்கம் வழங்கப்பட்டுள்ளன.

தலைமை கணக்கீட்டு அலுவலர்

பெயர்:- சமன் ஸ்ரீ ரத்னாயக்க
பதவி :- தர்தல்கள் ஆணையாளர் நாயகம்
திகதி:- 2023.01.30